## சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி

## SESSION CASE NO.106/2023

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ஆம் நாள் வெள்ளிக்கிழமை அ.சா.17 (பட்டியல் சாட்சி – 20) இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி.த.சத்தியராணி, பெஞ்ச் கிளார்க் கிரேட்–2, அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கழனியப்பன் | த/பெ.: | முத்துசாமி |
| கிராமம்: | நீடாமங்கலம் | தாலுக்கா: | நீடாமங்கலம் |
| மதம்: | இந்து | தொழில்: | காவல் ஆய்வாளர்,<br>நீடாமங்கலம் காவல் நிலையம். |
| வயது: | 59 | முகவரி: | நீடாமங்கலம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 07.08.2026.

**முதல் விசாரணை :–**

நான் தற்பொழுது நீடாமங்கலம் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.02.2022ம் தேதி திருத்துறைப்பூண்டி, காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 15.02.2022ம் தேதி காலை 09.00 மணிக்கு திருத்துறைப்பூண்டி காவல் உதவி ஆய்வாளர் திரு.கோபிநாத் என்பவர் நிலையப்பொறுப்பில் இருந்தபோது பாமணி, பாரதியார் தெருவைச் சேர்ந்த சுப்பிரமணியன் மகன் மாரிமுத்து என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று திருத்துறைப்பூண்டி காவல் நிலைய குற்ற எண்.87/2022, ச.பி.174 சி.ஆர்.பி.சியின் படி வழக்கு பதிவு செய்துள்ளார். உதவி ஆய்வாளர் கோபிநாத் பிற பணி அலுவலாக வெளியே சென்றதால் உதவி ஆய்வாளர் மனோகரன் என்பவர் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாதவன், ரஞ்சித் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை

மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். 11.00 மணிக்கு திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை சென்று பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் சாட்சிகள் மாரிமுத்து, மாரியப்பன், மாதவன், சுரேஷ், மணிகண்டன் ஆகியோர்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு முதல் நிலை காவலர் 1441 சங்கீதா என்பவர் மூலம் உடலை உடற்கூறாய்விற்கு அனுப்பி வைத்துள்ளார். இந்நிலையில் இவ்வழக்கில் இறந்து போன சந்தியா என்பவர் பள்ளி மாணவி என்பதாலும், இறப்பில் சட்டம் சார்ந்த மருத்துவரால் பிரேத பரிசோதனை செய்தால் உண்மை நிலை தெரிய வரும் என அறிந்து திருத்துறைப்பூண்டி, அரசு மருத்துவமனையிலிருந்து உடலை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி சட்டம் சார்ந்த மருத்துவத்துறைக்கு அனுப்பி பிரேத பரிசோதனை முடித்து உடலை உரியவரிடம் ஒப்படைத்துள்ளார். இவ்வழக்கின் சாட்சிகள் மாரிமுத்து, மாதவன், ரஞ்சித், மாரியப்பன், மாதவன், சுரேஷ், மணிகண்டன், மாதவன், த/பெ.முருகையன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகள் விசாரணையில் இறந்த பெண் இவ்வழக்கின் எதிரி லோகேஷ் (எ) யோகேஷ் என்பவரால் கட்டாயப்படுத்தி காதலிக்க சொன்னதாகவும், லவ்வர்ஸ் டேக்கு வெளியே வரச்சொல்லி கட்டாயப்படுத்தி வீட்டிற்கு சென்றதை தெருக்காரர்கள் பார்த்ததாலும், வெளியே வராத காரணத்தினால் எதிரி இறந்தவரை செத்து தொலை என திட்டியதால் மனம்

உடைந்து தற்கொலை செய்து கொண்டதாக விசாரணையில் தெரியவந்ததால் சட்டப்பிரிவு 174 சிஆர்பிசியிலிருந்து இதச 306–ன் படி பிரிவு மாற்றம் செய்து அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். புலன் விசாரணைக்கு ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததை நான் எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சி மாரிமுத்தை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் கஸ்தூரி, சஞ்சய், கோமதி, சித்ரா ஆகியோர்களை 16.02.2022ம் தேதி விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் 03.03.2022ம் தேதி 15.00 மணிக்கு தெற்கு பாமணி எதிரி வீட்டில் எதிரி லோகேஷ் (எ) யோகேஷ் என்பவரை குற்றக்காரணம் கூறி கைது செய்தேன். பின்னர் அவரை விசாரணை செய்தபொழுது அவர் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ராகவன், அஜீத் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் தான் டாடா ஏசி வாகனத்தில் டிரைவராக வேலை பார்த்து வருவதாகவும், தன் வீட்டிற்கும் எதிரே ஏற்கனவே குடியிருந்தபோது 8ம் வகுப்பு படித்த போது சந்தியாவிற்கும், தனக்கும் பழக்கம் ஏற்பட்டதாகவும் 2021ம் ஆண்டு வருடப்பிறப்பிற்கு சிவன் கோவில் அருகே கேக் வெட்டி கொண்டாடியதாகவும், 14.02.2022ம் தேதி லவ்வர்ஸ் டே அன்று எதிரி இறந்தவர் வீட்டிற்கு சென்று வா வெளியே போய் லவ்வர்ஸ் டே கொண்டாடலாம் என சொன்னபோது ஆரம்பத்தில் போகலாம் என சொல்லிவிட்டு அன்றைய தினம்

வரமுடியாது என சொன்னதால் ஆசையாக இருந்த இவ்வழக்கின் எதிரி, இறந்த சந்தியா வீட்டிற்கு சென்று இறந்தவரை பார்த்து அனைவரும் லவ்வர்ஸ் டே ஜாலியாக கொண்டாடுகிறார்கள், உன்னை போய் நான் லவ் பண்ணினேன் பாரு, நீ இருக்கிறதை விட செத்துப்போகலாம் என சத்தம் போட்டு திட்டிவிட்டு வெளியே சென்றபோது தெருக்காரர்கள் அதை பார்த்ததால் சந்தியா அவமானப்பட்டு தூக்கு மாட்டிக்கொண்டதாகவும், இதை கேள்விபட்டு போலீஸ் பிடித்துவிடும் என பயந்து சென்னை பூந்தமல்லி சென்றுவிட்டதாகவும் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறினார். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.13** ஆகும். பின்னர் எதிரியை காவல் நிலையம் அழைத்து வந்து காவல் நிலையத்தில் வைத்து திரேக பரிசோதனை செய்து அதே நாளில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இவ்வழக்கின் சாட்சி பரமேஸ்வரி, அரசு மருத்துவர் திருத்துறைப்பூண்டி என்பவரையும், டாக்டர்.திரு.நவீன், திருவாரூர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை, பெண் காவலர் சங்கீதா, உதவி ஆய்வாளர்கள் கோபிநாத், மனோகரன், பகுப்பாய்வு துணை இயக்குநர் அருணகிரி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். 30.06.2022ம் தேதி இவ்வழக்கில் எனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது 306 இதச–வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையின்

பொழுது அ.சா.8, அ.சா.11 ஆகியோர்கள் எனது விசாரணையின் போது வாக்குமூலத்தில் உள்ளபடி தான் சொன்னார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

சந்தேகத்தின் அடிப்படையில் தான் எதிரி மீது புகார் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சந்தேகம் உள்ளதாக புகார் கொடுத்துள்ளார். எதிரியுடைய மொபைல் CDR Call Detail Record மற்றும் Location பெற்றுள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகள் கோமதி, சித்ரா மற்றும் சிலர் இவ்வழக்கில் இறந்து போன சந்தியா வீட்டிற்கு எதிரி வந்து போனதை நேரடியாக பார்த்ததால் வழக்கிற்கு போதுமான ஆதரங்கள் இருந்ததால் சிடிஆர் எதுவும் தனியாக பதிவு செய்யவில்லை. சம்பவத்திற்கு முன் இருவருக்கும் இடையே மிரட்டல் அல்லது தகராறு நடந்ததாக ஏதேனும் ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கின் சாட்சி கஸ்தூரி என்பவர் ஏற்கனவே இவ்வழக்கின் எதிரி வீட்டின் அருகே குடியிருந்த போது தனது மைனர் மகளை காதலித்தது தெரிந்து அந்த தொந்தரவினால் இரு குடும்பத்திற்கும் பிரச்சனை ஏற்பட்டதால் அந்த இடத்தை காலி செய்து விட்டு வெளியே வந்திருப்பதாக தனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார். ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு சென்றதற்கான வாடகை ஒப்பந்தம் பார்த்தேனா, கைப்பற்றினேனா என்றால் இல்லை. இவ்வழக்கிற்கு தொடர்பில்லாதது என்பதால் அது பற்றி நான்

விசாரிக்கவில்லை. மேலும், சாட்சி கஸ்தூரி என்பவர் சங்கர் என்பவருக்கு சொந்தமான கூரை வீட்டில் ரூ.500 வாடகை கொடுத்து தங்கியிருப்பதாக விசாரணையில் சொல்லியுள்ளார். சம்பவம் நடந்த இடத்தில் கைரேகை, வேறு அறிவியல் ஆதாரங்கள் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. இவ்வழக்கில் இறந்து போன நபர் எதிரியின் தற்கொலை தூண்டுதலினால் இறந்திருந்ததால் அறிவிப்பூர்வமான ஆதாரங்கள் தேவையில்லை என்பதால் பெறப்படவில்லை. எதிரி, இறந்தவர் குடும்பத்தோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டதற்கான சிடிஆர் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கின் சாட்சி கஸ்தூரி (இறந்தவரின் அம்மா) செல் நம்பரான 9363582355–ற்கு அடிக்கடி தொடர்பு கொண்டதால் தான் விவரம் தெரிந்து பிரச்சனை ஏற்பட்டுள்ளது. மேலும் எதிரியும் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் சந்தியாவின் போன் நம்பரை கேட்டபோது தனது அம்மாவின் செல் நம்பரை கொடுத்ததாகவும், அந்த நம்பரிலிருந்து இருவரும் அடிக்கடி பேசிக்கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளார். காதலித்தார்கள் என்பதை நிரூபிக்க புகைப்படங்கள் மற்றும் வேறு ஏதேனும் ஆதாரங்கள் தாக்கல் செய்துள்ளேனா இல்லை. பள்ளி தலைமை ஆசிரியர், வகுப்பு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை விசாரணை செய்தேனா என்றால் இவ்வழக்கு சம்பவமானது இறந்தவரின் வீட்டில் நடந்ததால் வீட்டை சுற்றி உள்ளவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எங்கள் காவலர்கள் எப்பொழுதும் அரசு

மருத்துவமனையில் பணியில் இருப்பார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து நீதிமன்றம் சுமார் 1 கி.மீ இருக்கும். எதிரி, இறந்து போன சந்தியாவிற்கு அவரது செல்லில் இருந்து பேசியதற்கான Call List எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். இறந்து போன சந்தியாவை யார் மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்த்தார்கள் என்றால் சங்கர் என்பவர் கொண்டு வந்து சேர்த்தார். சங்கர் என்பவரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரித்துள்ளேனா என்றால் இல்லை. மருத்துவமனையில் சந்தியாவை கொண்டு சேர்த்த நேரம் 14.02.2022 மாலை 06.55 மணி. அங்குள்ள காவலர் இந்த விவரத்தை அப்பொழுதே காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்திருப்பார் என்றால் சரிதான். சந்தேக காரணம் கொண்ட வழக்குகளில் புகார் வரும் வரை புலன் விசாரணை நிறுத்தக்கூடாது என்றாலும், மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைத்தவுடன் சென்று வாக்குமூலம் பெற்று புலன் விசாரணை செய்ய வேண்டும் என்றால் புகார் வந்தால் மட்டுமே செல்ல முடியும். வழக்கு சம்பந்தமாக அது தொடர்புடையவர்கள் அல்லது பொது மனிதர்கள் யாரேனும் புகார் கொடுக்கும்பட்சத்தில் வழக்கு விசாரணையை தொடரலாம். மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் படி இரவே காவல் நிலையத்திற்கு தகவல் கிடைக்கப்பெற்றது என்றாலும் வழக்கிற்காக காலையில் கிடைத்தாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரேத விசாரணை திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில்

செய்யப்பட்டது. பிரேத பரிசோதனை செய்த மருத்துவரிடம் எவ்வளவு நேரத்திற்கு முன்பு இறப்பு ஏற்பட்டது என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அது வழக்கிற்கு தேவையில்லை என்பதால் நான் தெரிந்து கொள்ளவில்லை. இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை 15.02.2022 காலை 09.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த முதல் தகவல் அறிக்கை எப்பொழுது நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் 174 சிஆர்பிசி ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டதால் முதல் தகவல் அறிக்கையை செயல்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அதனால், உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை, சட்டப்பிரிவை மாற்றம் செய்த பிறகே 03.03.2022ம் தேதி அனுப்பி வைக்கப்பட்டது. 174சிஆர்பிசியின் படி நிர்வாகத்துறை நடுவர் (தாசில்தார்) அனுப்பியதால் நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை. அ.சா.ஆ.1–ல் 2ம் பக்கத்தில் 9ம் வரியில் வீட்டில் என்ற வார்த்தை வேறு எழுத்தால் இடை சொற்களாக எழுதப்பட்டுள்ளது என்றால் புகார் கொடுக்கும் போதே அவ்வாறு இருந்ததால் நான் அதை விசாரிக்கவில்லை. நான் விசாரணை மேற்கொண்டு 16.02.2022ம் தேதி இறப்புக்கு பயன்படுத்தியாக கூறும் தடயங்கள் துப்பட்டா இறந்தவரின் உடை போன்ற தடயங்கள் எதுவும் கைப்பற்றினேனா என்றால் இல்லை. 14.02.2022ம் அன்று என்ன கிழமை என்று ஒப்புதல் வாக்குமூலத்தில் ஞாயிற்று கிழமை என்று உள்ளது. ஆனால் அன்றைய தினம் என்றாலும், சந்தியா பள்ளிக்கு சென்றுவிட்டார் என்றாலும் சரியல்ல. 14.02.2022–ல்

இறந்து போன சந்தியா என்பவர் பள்ளிக்கு சென்றாரா, இல்லையா என்பது குறித்து நான் விசாரணை செய்து தெரிந்து கொண்டேனா என்றால் சம்பவ நாளில் இறந்து போன சந்தியா பள்ளிக்கு செல்லவில்லை. சந்தியா பள்ளிக்கு செல்லவில்லை என்பதற்கும், வயது நிரூபணத்திற்கும் வருகைப்பதிவேடு அல்லது பள்ளி சாட்சி மூலம் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. ஒப்புதல் வாக்குமூலம் எதிரி கொடுக்கவில்லை என்றாலும், அதில் குறியீடு செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ.13 ஆவணம் எதிரியுடையது அல்ல என்றாலும் சரியல்ல. என்னுடைய வழக்கு ஆவணங்களில் சந்தியா இந்த நேரத்தில் இறந்தார் என்பதற்கான சாட்சியம் இல்லை என்றால் சரியல்ல. வழக்குமூலம், பார்வை மகசர், ஒப்புதல் வாக்குமூலம் மற்ற வழக்கு ஆவணங்கள் காவல் நிலைத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்ததாக சொல்லப்படும் விதம் சரியானது அல்ல என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை காலதாமதம் மற்றும் நீதிமன்றத்திற்கு அனுப்பியதில் காலதாமதம் உள்ளது என்றாலும், அதற்கு காரணம் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி அன்றைய தினம் இறந்த நபரின் வீட்டிற்கு செல்லவில்லை என்றாலும், இறந்த நபரை திட்ட வேண்டிய அவசியமில்லை என்றாலும் சரியல்ல. இந்த மரணத்திற்கும், எதிரிக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சாட்சிகள் அனைவரும் இறந்து போன நபருக்கு உறவினர்கள் என்றால் சரியல்ல. எதிரி நிரபராதி என்று

சொன்னால் சரியல்ல. எதிரியின் வீட்டில் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியுள்ளதாக சொல்லியுள்ள நிலையில் அங்கு அவர்கள் வர வேண்டிய அவசியமில்லை என்று சொன்னால் சரியல்ல. பள்ளி நிர்வாக சாட்சிகள், செல்போன் கால் லிஸ்ட், சங்கர் போன்ற நபர்களை விசாரித்தால் இந்த வழக்கு பாதிக்கப்படும் என்பதற்காக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாக்குமூலம் மற்றும் இதர ஆவணங்களில் முரண்பாடுகள் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.